உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 4. | காலயுத்தி௵ ஆனி௴ - 1918௵ ஜுன்௴ | இதழ் 6.

## திருநாரையூர்.

### விநாயகர் திருவிரட்டை மணிமாலை.

என்னை நினைந் தடிமைகொண் டென்னிடர் கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்—புன்னை
விரசு மகிழ்சோலை வியநாரை யூர்முக்க
ணரசுமகி ழத்திமுகத் தான்.

---

## சிவஞான போதம்.

### ஐந்தாஞ் சூத்திரம்.

விளம்பிய வுள்ளத்து மேய்வாய் கணமூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

(இ-ள்.) விளம்பிய உள்ளத்து = மேலைச் சூத்திரங்களிற் கூறிய உயிராலே—மெய் வாய் கண் மூக்கு = மெய் வாய் கண் மூக்கு (செவி) யென்பன—அளந்தறிந்து = தத்தம் விடயங்களை இஃது இன்னதென்று அளவிட்டறிந்தும்—அறியா = (அவ்வாறறியும் தம்மையுந் தம்மை யதிட்டித்து நின்று செலுத்தும் அவ்வுயிரையும்) அறியமாட்டா.— ஆங்கவைபோல் = அவ்விந்திரியங்கள் போல்—தாம் = உயிர்களும்—தம் உணர்வின் தமியருள் = தமது அறிவை விளக்குவதாகிய முதல்வனது சிற்சத்தியால்—(அளந்தறிந் தறியா = மேற்கூறியவாறு கீழாலவத்தையிற்படும் அஞ்சவத்தை, இலாடத்திற்படும் அஞ்சவத்தை ஆகிய இருவகை அஞ்சவத்தையில் நின்று வினைப்பயன்களை யறிந்து அனுபவிக்கும் தம்மையும், தம்மைச் செலுத்திநிற்கும் திருவருளையும் அறியமாட்டா).—அவையே = உயிர்கள் (அவ்வாறுணர்தல்)—காந்தம் கண்ட பசாசத்து =

காந்தத்தைக் கண்ட இரும்பு அதன் சந்நிதிமாத்திரையின் வலித்துக்கொள்ளப்படுமாறு போலக் கரணத்தாலன்றி சங்கற்பத்தால் அதிட்டிக்கும் முதல்வன் சந்நிதிமாத்திரையின் ஆம். ஆதலால் அதுபற்றி முதல்வன் விகாரியாதல் இல்லை. (எ-று.)

"செவி" என்பது சொல்லெச்சமும் "ஆதலால் அதுபற்றி முதல்வன் விகாரியாதல் இல்லை" என்பது குறிப்பெச்சமும் ஆதலால் உரையில் வருவிக்கப்பட்டன.

மெய் வாய் கண் மூக்குச் செவிகளைக்கூறியது உபலக்கணமாகலின், ஏனைக்கருவிகளும் அவ்வாறே அளந்தறிந்தறியா என்பது கொள்ளப்படும்.

உயிர் விடயங்களை யறியுமிடத்து முதல்வன் உயிருடன் நின்று அறியும்படி செய்வானாயின், உயிர் விடயங்களை யறிவதுபோல் முதல்வனையும் அறிதல்வேண்டும் என்பாரை மறுத்தற்பொருட்டு அளந்தறிந்து என்று கூறிவிடாமல் "அளந்தறிந்தறியா" என்று கூறியருளினர்.

உள்ளத்து = உள்ளத்தால் = உயிரால்.

ஆங்கவை = அவ்விந்திரியங்கள்.

தம் உணர்வின்தமி = (தம்) அறிவிற்கு வியஞ்சகமாகிய தமது முதல்.

"தமியருள்" என்பது திரோதான சத்தியை. திரோதான சத்தியாவது உயிர்களுக்கு மறைப்பைச் செய்து போகத்திலழுத்தும் அருட்சத்தியின் அவசரம். மாயை கன்மங்கள் திரோதான சத்திக்குக் கருவியாய் அதனுள் அடங்குவதனால், திரோதானசத்தியின் இலக்கணங் கூறவே மாயாகன்மங்களின் இலக்கணங்களும் கூறப்பட்டனவாகக் கொள்ளல்வேண்டும்.

மெய் வாய் கண் மூக்குச்(செவி) உள்ளத்தால் அளந்தறிந்து அறியா. அவைபோல் தாம் (அஃதாவது உயிர்கள்) தம் தமியருள் (அஃதாவது தம் முதல்வனதருளால்) அளந்தறிந்தறியா எனக் கூட்டிப் பொருளுரைத்துக்கொள்க.

## இச்சூத்திரத்தின் அதிகரணங்கள்.

1-வது—விளம்பிய வுள்ளத்து மெய் வாய் கண் மூக்கு அளந்தறிந்தறியா.

2-வது—ஆங்கவைபோலத் தாம் தம் உணர்வின் தமியருள் காந்தங்கண்ட பசாசத்தவையே.

## இச்சூத்திரத்தின் சூர்ணிகை.

1-வது—உயிராலே தத்துவங்களெல்லாம் தொழில் செய்யும்.

2-வது—அரனாலே உயிர்களெல்லாமறியும்.

## இச்சூத்திரத்தின் வார்த்திகம்.

1-வது—ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவால் உணருமென்றது. அவற்றினான் ஆன்மா வொற்றித்துக் காணினல்லது அவை ஒன்றையும் விடயியாவாகலான்.

2-வது—இனி இதுவுந் தமது முதலாலே யுணருமென்றது—இவ்வான்மாத் தன்னாலே யுணருமிந்திரியங்களைப் போலத் தானுந் தன்னையுணராது நிற்றலான்.

---

## இச்சூத்திரத்தின் உதாரண வெண்பாக்கள் நான்கு.

---

## முதல் அதிகரணம்.

விளம்பிய வுள்ளத்து மெய் வாய் கண் மூக்கு அளந்தறிந்து அறியா.

(இ - ள்.) மெய் வாய் கண் மூக்குச் செவியென்பன மேலைச் சூத்திரத்திற் கூறிய உயிராலே தத்தம் விடயங்களை அளவிட்டறிந்தும், அவ்வாறறியுந் தம்மையும் தம்மை யதிட்டித்து அறிவிக்கும் உயிரையும் அறியமாட்டா (எ - று.)

இதில் 1-வது—தன்னாற் கூறப்படும்பொருள்—உயிராலே தத்துவங்களெல்லாம் தொழில்செய்யும்.

2-வது— ஐயப்பாடு— இந்திரியங்கள் விடயங்களை உயிராலே உணருமோ, புத்திதத்துவத்தால் உணருமோ?

3-வது— பிறர்கூறும் பக்கம்—புருஷன் இந்திரியங்களோடு கூடினும் தாமரையிலையின் நீர்போலப் பற்றற்று நிற்ப, புருடன் சந்நிதியில் புத்திதத்துவமே ஐம்பொறிவாயிலாக விடயங்களை யறியும். (இது சாங்கியர் பக்கம்.)

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு—அவ்வைம் பொறிகளோடும் உயிர் ஒற்றுமைப்பட்டு நின்றறிந்தாலன்றி அவை ஒரு விடயத்தையும் விடயிக்கமாட்டா. ஆதலால் உயிரே புத்தி

யைக் கருவியாகக்கொண்டு இந்திரியங்களின் வழியாக விடயங்களை யறியும்.

5-வது இயைபு—உதாரண வெண்பா.

ஐம்பொறியை யாண்டங் கரசா யுளநிற்ப
வைம்பொறிக ளுள்ள மறியாவா—மைம்பொறியிற்
காணதேற் காணது காணுமுளங் காணதேற்
காணகண் கேளா செவி.

(இ - ள்.) அரசு ஆய்=அரசனைப்போல (அஃதாவது அரசன் அத்தாணிமண்டபத்தில் தங்கி தன் கீழ்க்காரியங்களைச் செய்வாரை அவரவர்க்குரிய காரியங்களிற் செலுத்தி ஆளுமாறு போல)—உளம் ஐம்பொறியை ஆண்டு அங்கு நிற்ப=உயிர் ஐம்பொறிகளை அவ்வவற்றிற்குரிய விடயங்களிற் செலுத்தி யாண்டு இலாடத்தானத்தில் நிற்றலால்—ஐம்பொறிகள் உள்ளம் அறியா ஆம்=(அரசனால் ஏவப்பட்டோர் அரசன் ஏவிய கருமத்தைமட்டும் செய்தலேயன்றி அதிகமாய்ச் செய்யமாட்டாதவாறுபோல்) அவ்வைம்பொறிகள் (விடயங்களையறிதலேயன்றி) உயிரை யறியமாட்டாவாம். (ஆனல், ஐம்பொறிகள் உயிரைக்கொண்டன்றி அறிதல் கூடாதாயினும், ஐம்பொறிகளையின்றி உயிர் அறிதல் கூடாதோவெனின்,)—ஐம்பொறியிற் காணதேற் காணது=(அமைச்சரின்றி அரசர் ஒரு காரியமுஞ் செய்யமாட்டாத வாறுபோல்) ஐந்திந்திரியங்களில் நின்று அறியாதாகில் உயிர் அறியாது.—காணும் உளம் காணதேல் கண்காண செவிகேளா=(அரசனின்றி அமைச்சர் ஒருகாரியத்தையுஞ் செய்யமாட்டாத வாறுபோல) அவ்வாறறிகின்ற உயிர் காணவிடில் கண்ணுங் காணது, செவியுங் கேளாது. (அஃதாவது கண் காது முதலிய இந்திரியங்கள் தத்தம் விடயங்களை யறியமாட்டாவாம்.) எ-று.

இதனல் உயிரையின்றி ஐம்பொறிகளும் ஐம்பொறிகளையின்றி உயிரும் விடயங்களை யறியமாட்டா வென்பது, அஃதாவது, ஒன்றையறிதற்கு உயிரும் ஐம்பொறிகளும் தம்முள் இன்றியமையாவென்பது பெறப்பட்டது.

ஐம்பொறிகளை யின்றி உயிர் விடயங்களை யறியமாட்டாதென்பது ஐம்பொறிகள் இல்லாத சொப்பனத்தானத்தை உயிர் அடைந்தபொழுது அவ்விடத்தில் உயிர் இருந்தும் விடயங்களை யறியாமையினுற் கண்டுகொள்க.

நிற்ப=நிற்றலால். அரசு ஆய்=அரசைப்போல.

# உண்மைச் சைவம் உலகத்திலுண்டா?.

உலகத்திலுள்ள சமயங்களெல்லாவற்றிற்கும் நாயகமும் தாயகமுமாகக் கருதப்படும் நம் சைவ சமயத்தின் நிலைமையை விவேகியொருவன் உற்றுநோக்கின் இப்போது உண்மைச் சைவம் உலகத்திலில்லை யென்பது புலப்படும். "அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்—நின்றது மன்னவன் கோல்" என்றருளிச்செய்தனர் பெருநாவலர். இதில் "அந்தணர் நூல்" என்பது சமய நூல்களையும் நீதிநூல்களையும். "அறம்" என்பது சமயவொழுக்கங்களாகிய சிறப்பொழுக்கங்களையும் பொதுவொழுக்கங்களையும். இதனால் நூல்களும் அந்நூல்களிற்கூறிய ஒழுக்கங்களும் சீவித்தற்கு அரசாட்சித்துணை இன்றியமையாததென்பதும், அரசாட்சித்துணையின்றி இவை சீவியா வென்பதும் பெறப்பட்டன.

முற்காலத்தில் சேரசோழ பாண்டியர் முதலிய அரசர்களால் நம்முடைய சைவ சமயம் பரிபாலிக்கப்பட்டது. அவர்களுக்குப் பின் நம் சமயத்தைப் பரிபாலிப்பாரின்றி நாமெல்லாம் "ஆள்வாரிலாமாடு"களாய்விட்டோம். அவர்களுக்குப்பின் மகமதியர்கள் சுமார் ஆயிரம் வருடம் இத்தேசத்தையாண்டு, தேடித்தேடிச்சென்று நம்முடைய தேவாலயங்களை நாசப்படுத்தினார்கள். நம்முடைய அளவிறந்த நூல்களையும் புத்தகசாலைகளையும் எரிக்கிரையாக்கினார்கள். தங்கள் மகமதிய சமயத்திற்சேராதவர்களைக் கத்திக்கிரையாக்கினார்கள். அன்னார் பொருள்களையும் பெண்டு பிள்ளைகளையும் சூறையாடினார்கள். அவர்கள் பல நூற்றாண்டுகளாகச்செய்த பல கொடுமைகளால் நம்முடைய சமயம் இறந்ததென்றே சொல்லலாம். அவர்களுக்குப் பின் காருணியமுள்ள பிரிட்டிஷ் அரசாட்சியில் நமக்குப் பலவிதமான நன்மைகள் உண்டாயின. மகமதியர்களால் இருந்தவிடமும் தெரியாதபடி நாசமாக்கப்பட்ட கோயில்கள் பல மீண்டும் கட்டப்பட்டன. அவர்களால் எரிக்கிரையாயினபோக எஞ்சி நின்றவற்றுள் கறையானுக்கிரையாகாமல் தப்பிய நூல்கள் சில வெளிவரற் கேதுவுண்டாயிற்று. நாம் நம்முடைய சமயத்தைப் பரிபாலித்தற்கு வேண்டிய சாதனங்கள் பல உண்டாயின. இவைகள் உண்டாயிருந்தும் நம்முடைய சமயம் ஓங்கி வளராமல் முன்னிலும் அதிகமாக அழிந்து வருகிறது. முற்காலத்தில் மகமதியர்கள் சாமபேத தானதண்டம் என்னும் சதுர்வித உபாயங்களுள் தண்டம் ஒன்றையே அநுட்டித்தார்கள். அதனால் அக்காலத்தில்

நம்முன்னோர்கள் பலர் தங்கள் உயிரைப் பறிகொடுத்தும் சமயத்தைக் காப்பாற்றினார்கள். இக்காலத்திலோ வெனில், கிறிஸ்து பாதிரிமார் அநுட்டிக்கும் சாம பேத தானமாகிய ஏனையமூன்று உபாயங்களாலும், ஆங்கிலபாஷாப் பிரவேசத்தாலும் நம்முடைய சமயநூல்களும் ஒழுக்கங்களும் தாமே முன்னினும் அதிகமாகச் சீரணமடைந்து வருகின்றன. ஆதலால் சைவாபிமான சிலர்களே, எண்ணிறந்த சிவாலயங்களுக்கு உயிர்கொடுத்த உத்தம நாட்டுக்கோட்டை நகரத்துப் பிரபுக்களே, சைவசமய அரசாட்சி செய்யப் புறப்படுங்கள். சைவர்களை யெல்லாம் உங்கள் சமயவரசாட்சியின் கீழ்வைத்து ஆளுங்கள். கிறிஸ்தவர்கள் அநுட்டிக்கும் உபாயங்களை நீங்களும் அநுட்டியுங்கள். ஆலய சீரணோத்தாரணத்தோடும் உற்சவங்களோடும் திருப்தியடைந்துவிடாதீர்கள். நம்முடைய சமயாசாரியர்கள் கோயில்களைக் கட்டினார்களா? குளங்களை வெட்டினார்களா? இல்லையில்லை. சனங்களுக்குச் சமய உணர்ச்சியையுண்டாக்கினார்கள். அவ்வுணர்ச்சியின் பயனாக எண்ணிறந்த கோயில்கள் உண்டாயின. அளவிறந்த நூல்கள் உண்டாயின. எங்கும் சமயவொழுக்கங்கள் பரவின. ஆதலால் சமயவுணர்ச்சி யுண்டானால் மற்றவையெல்லாம் தாமேயுண்டாகும். சமய உணர்ச்சி யில்லாதபோது ஆலயங்களால் அவ்வளவு பயன் உண்டாகாது. ஆதலால் இமசேதுபரியந்தம் நம் சைவசமய உணர்ச்சியைப் பரப்புங்கள். சிற்சிலவேதாகம பாடசாலைகளாலும் தேவாரபாடசாலைகளாலும் உலகம் திருந்திவிடாது. சர்வஜனங்களுக்கும் பொதுவான சைவசமய உணர்ச்சியைப் புகட்டுங்கள். வெறுஞ் சமயபாடசாலை வைத்தால் அதில் ஒருவரும் போய் நம் சமயநூல்களைக் கற்கமாட்டார்கள். பிரதமபாடசாலை முதல் உயர்தரப் பாடசாலைவரையில் எங்கும் ஆங்கில பாடசாலைகள் வைத்து அவைகளின் மூலமாய் சமய உணர்ச்சியையும் ஒழுக்கங்களையும் கற்பிக்க முயலுங்கள். இவ்வாறு இப்போதே செய்வீர்களானால் ஐந்து வருடங்களுக்குள் நம்முடைய சமயம் மிகவும் அற்புதமாய் விளங்கக்காண்பீர்கள். இவ்வாறு செய்வது சாத்தியமல்லவென்று எண்ணாதீர்கள். இது நீங்கள் செய்யும் சீரணோத்தாரண முதலியவைகளினும் மிக இலேசானதாம். இவ்வாறு நீங்கள் செய்யும் வரையில் உண்மைச்சைவம் உலகில் ஓங்காது.

(இன்னும் வரும்.)

# குகன் என்னுந் திருநாம விளக்கம்.

ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளுக்குஉரிய திருப்பெயர்கள் பல. அப் பெயர்கள் ஒவ்வொன்றும் சிறந்த தத்துவார்த்தங்களை யுடையன வாயிருக்கும். குகன் என்னும் சொல் குகையில் எழுந்தருளியிருப்பவன் என்று பொருள்படும். (குஹம்—குகை) குகையென்பது மலையிலுள்ள குகைகளையும், மானுடசரீரந்தோறும் அமைந்திருக்கும் இருதயம் என்னும் குகைகளையும் குறிக்கும். "இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான்றாள் வாழ்க" என்னுந் திருவாசகச் சுருதியின்படி இறைவர் உயிர்களுடைய உள்ளக்கமலத்தில் இடையறாது எழுந்தருளியிருந்து அவ்வுயிர்கள் நினைக்கும் நல்லெண்ணங்களையுந் தீய எண்ணங்களையும் உடனுடனறிந்து குறித்து வருகின்றார். அது "தொழுது தூமலர் தூவித் துதித்துநின் - றழுது காமுற் றரற்றுகின்றா ரையும் - பொழுது போக்கிப் புறம்பலைப் பாரையு-மெழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே," என்னுந் தேவாரச் சுருதியாலும் இனிது விளங்கும்.

ஆணவமலமென்னும் அந்தகாரத்தி லழுந்தி அறிவு இச்சை செயல்கள் விளங்காது வருந்தும் ஆன்மாக்கள், அவ்விருளிலிருந்து நீங்கி அறிவு முதலியன விளங்கப்பெற்று முத்தியடைவதற்கு ஏதுவாகக், கருணாசாகரராகிய கடவுள் சரீரமாகிய விளக்கை அவ்வான்மாக்களுக்கு அனுக்கிரகித்திருக்கின்றனர். அது "முத்திக்கு வித்தாம் உடம்பு" என்பதனால் வெளியாம். "உடம்பினாற் பெற்ற பயனாவதெல்லாம், உடம்பினுள் உத்தமனைக்காண்" என்னுந் திருவாக்கு இங்கு கவனிக்கத்தக்கது.

இனி மனித சரீரம் 96 அங்குலம் (8சாண்) உயரமும், 32 அவயவங்களும், 32 பற்களும், 32 கவளங்கொள்ளுவதற்குரிய 32 சாணுள்ள குடரும், 3½ கோடி நரம்புகளும், 3½ கோடி உரோமங்களும், வாதம், பித்தம், சிலேட்டுமங்களும் பிறவுங் கூடியமைந்திருக்கின்றது.

இந்தச் சரீரத்தின் மார்பின் இடது பாகத்தில் "இருதயகமலம்" என்பது ஓர் சிறந்த கருவியாக அமைந்திருக்கின்றது. அவ்விருதய கமலம் இரத்தம், கபம் என்பவைகளின் தெளிவாய் அமைந்து, அவ்விரத்த கபங்களைத் தெளியச்செய்யும் தன்மையுடையதாயும், அறிவை பிரகாசிக்கச்செய்வதாயும் இருந்துவருகின்றது. இதற்கு தேகாலயம், தகரம், சத்து, இரண்மயகோசம், அந்தப்புரம், புண்டரீகம், குகைமுதலான பல பெயர்களுண்டு, அது குவிந்த தாமரைப்

பூவைப்போன்றதாய், 8 இதழ்களையுடையதாய், சிவந்த நிறமுடையதாய், ஐந்து துவாரங்களையுடையதாய், மாமிசகண்டமாய், தன் மத்தியில் அழகிய குஞ்சங்கள் சூழ்ந்த கர்ணிகையை, (கொட்டை) யுடையதாய் விளங்கும். அதன் கொடி உள்ளே 9 துவாரங்களையும் மேலே முள்ளுகளைப்போன்ற சவ்விணையுமுடையதாயுமிருக்கும்.

இவ்விதய கமலத்தின் மத்தியிலிருக்கும் கர்ணிகையின் மத்தியில் சூரியனும், அவர் மத்தியில் சந்திரனும், அவர்மத்தியில் அக்கினியும், அவர்மத்தியில் மகேசுரமூர்த்தியும் அவர்மத்தியில் குகப்பெருமானும் தூலசூக்குமமுறையாய் வீற்றிருப்பார்கள். இதய கமலத்தில் வசிக்கும் ஜீவான்மா சூரியன் சந்திரன் முதலியவர்களுக்கும் குகன் என்னும் பெயர்வழங்கலாம். ஆயினும் சர்வாந்தரியாமியாய் விளங்கும் ஸ்ரீசிவபெருமானது ஆனந்தமயவடிவினராயுள்ள ஸ்ரீசண்முகப்பெருமானுக்கே அக்குகன் என்னும் பெயர் சிறப்பாய் வழங்கப்பட்டுவருகின்றது. அதனைப் பிரசிேனாபநிடதம், சாந்தோக்யோபநிடதம், கடவல்லியுபநிடதம், கைவல்லியோபநிடதம் ஆகிய இவைகளிற் காணலாம். ஸ்ரீ சிவபெருமான் உமாதேவியாரைநோக்கி உனது திருக்குமாரன் சகல பிராணிகளின் இதய கமலங்களாகிய தகராகாசமத்தியில் வசித்தலால் அவன் குகனென்னும் பெயரை விசேஷமாய்ப் பெற்றிருக்கின்றான் என்று சம்பவகாண்டம் 35ம் அத்தியாயம் 15ம் சுலோகத்திலருளிச்செய்திருக்கின்றார்.

மானுடராய்ப்பிறந்தோர் பழகவேண்டிய வித்தைகளனைத்திற்கும் இந்தத் தகரவித்தையே சிகாமணியாயுள்ளது. இதுபிராணாயாமமுதலாகச் சொல்லப்படுகின்ற யோகசாதனையினால்மட்டுஞ் சித்திக்கத்தக்கது. இவ்வரிய வித்தையானது தற்காலத்தில் சைவசமய ஆசிரியர்முதலியோரின் பராமுகத்தினால் அத்திப்பூவாய் விளங்குகின்றது. இக்குறைதீரக் குகப்பெருமான் திருவருள் புரியுமாறு சிவநேசச்செல்வர்கள் பன்முறையும் பிரார்த்தித்தல் வேண்டும். சுபம். இந்தப்பத்திரிகையினால் மனிதராயுள்ளோர் அறிந்துகொள்ளவேண்டிய முக்கிய விஷயம் ஒன்று, அதாவது மனிதர் தமது இருதய கமலத்தில் இடையறாது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ குகப்பெருமான் நமது நல்ல எண்ணங்களையும் தீய எண்ணங்களையும் நன்றாயறிவர்; அவரறியாமல் நாம் யாதொன்றையும் எண்ணமுடியாது. நமது எண்ணங்களையெல்லாம் அவர் அறிந்து உடனே உலகமெல்லாம் அறியச்செய்திடுவார். அதனால் நாம் அவருக்கும் அவரது ஆலயமாய் விளங்கும் மனிதர்முதலிய உயிர்களுக்குந் துரோகஞ்செய்யாமல் யாவருக்குமே யியன்ற அளவு நன்மை செய்துவருதலே அவருக்குத்திருப்தி யென்றும், அதுவே நமது கடமையென்றும் உணர்ந்து நடந்துவருதலேயாம்.

சைவசமயத் திருக்குழாம், திருநெல்வேலி.

## எந்தச்சமயத்தையும் அநுஷ்டிக்கலாமா?

இக் கலிகாலத்திலே ஆங்கிலேய பாஷையைக் கற்றுணர்ந்த சிலர் எந்தச்சமயத்தை அநுஷ்டித்தாலும் அநுஷ்டிக்கலாம். எல்லாச் சமயங்களிலும் உண்மை பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அதனால் எதைக்கைக்கொண்டாலும் மோட்சங்கிடைக்குமென்று சொல்லுகிறார்கள். இது சரியான அபிப்பிராயமோ அல்லவோ என்பதைப்பற்றி ஈண்டு விசாரிப்பாம்.

எல்லாச்சமயங்களும் ஒரேவிதமான வழிபாட்டையும் ஒழுக்கத்தையும் ஞானத்தையும் போதிக்கின்றனவோவெனில், இல்லை. ஒவ்வொன்றும் போதனபேதத்தால் வித்தியாசப்பட்டேயிருக்கின்றது. ஒருசாரார் சரீரத்தைத்தவிர ஆத்மா என்பதொரு பொருளில்லை, கடவுளில்லை, புண்ணியபாவமில்லை, சுவர்க்கநரகமில்லை, பந்தமோட்சமில்லை என்று கூறுகின்றனர். மற்றொரு சாரார் ஆத்மாவுண்டு, புண்ணியபாவமுண்டு, சுவர்க்கநரகமுண்டு, பந்தமோட்சமுண்டு, புனர்ஜன்மமுண்டு, ஆனல் தேய்ந்து தேய்ந்து சென்றிறுதலே மோட்சமன்றிக் கடவுள் என ஒருபொருள் இல்லையென்று சொல்லுகின்றனர். வேறு சிலர் ஆத்மா முதலியவையுள்ளன வென்றும், பந்தம் நீங்கி நித்தவுருவத்தைப் பெற்றிருத்தலே மோட்சமென்றும், அது ஆத்மாவின் செயலாலே கைகூடுவதல்லது கடவுளருளால் உண்டாகுமென்பது பொருத்தமன்று என்றும் இயம்புகின்றனர். இன்னுஞ் சிலர் பிரகிருதி மாயையே பிரதானமான பொருளென்று செப்புகின்றனர். சிலர் ஆத்மாவாகிய நாமே பிரமமென்று புகலுகின்றனர். சிலர் பிரமா, விஷ்ணு, உருத்திரர் ஆகிய இவர்களில் ஒவ்வொருவரையே பரம்பொருளென்று சாதிக்கின்றனர். சிலர் அதிகார போக லய சிவபேதங்களுள் ஒவ்வொன்றையே யேற்று அதனையே பரம்பொருளென்று வாதிக்கின்றனர். சிலர் கர்மத்தை மறுக்கின்றனர். சிலர் மாயையை மறுக்கின்றனர். சிலர் ஆணவமலம் என்பதொன்றில்லை என்று சாதிக்கின்றனர். சிலர் புண்ணியத்தைப் பாவமாகவும், பாவத்தைப் புண்ணியமாகவும் பேசுகின்றனர். சிலர் பந்தநிலையையே மோட்சநிலையென்று அறைகின்றனர். இப்படி எல்லாவகையாலும் எல்லாச்சமயங்களும் பேதப்பட்டுக் கொண்டிருக்க எந்தச்சமயமாயிருந்தாலும் என்ன? அதனல் ஆவதொன்றில்லை; எதைக்கொண்டாலும் மோட்சம் கிடைக்குமென்று மனம்போனவாறு பேசுதல் தவறான காரியமாகும்.

ஒவ்வொரு சமயமும் பயன்தருமுறையில் பேதப்பட்டே யிருக்கிறது. பயன் பல படும்பொழுது எல்லாப் பயனையும் ஒன்றென்றுவது ஒரே தன்மையுடையனவென்றுவது சொல்லமுடியுமோ? முடியாது. ஒன்று மெய்ப்பயனுயிருக்க மற்றவை அதற்கு மாறுகவே யிருத்தல்வேண்டும். இவ்வாறு வேறுபட்ட பயனைத்தரும் சமயங்களெல்லாம் உண்மைநிலையுடையனவல்ல. எப்பொழுதும் உண்மைநிலை ஒன்றுகவே யிருத்தல்வேண்டும். உண்மைநிலை ஒன்றுயின் அதனுல் பிரதிபாதிக்கப்பட்ட மோட்சமும் ஒப்புயர்வற்றதாகவே விளங்கும். மற்றவை யெல்லாம் பொய்ந்நிலை அல்லது பந்தநிலை யென்றே அறியக்கிடக்கும்.

கடவுள் இல்லை யென்பார் அவரை ஒருபோதும் ஆராதிக்க மாட்டார். ஆத்மாவை இல்லையென்பார் ஆத்மாவை எப்பொழுதும் தரிசிக்கமாட்டார். அதன் பொது சிறப்பியல்பையும் அறிய முயலமாட்டார். ஆணவமலம், கன்மமலம், மாயாமலம் ஆகிய இவற்றை இல்லையென்பார் அவ்வாணவ கன்ம மாயைகளினின்றும் நீங்கமாட்டார். இப்படி அவரவர் கூறும் பொருள் நிச்சயம் வெவ்வேறுக இருத்தலின் யாவரும் ஒரே உண்மையான மோட்சத்தைப் பெறுவரென்பது பயனற்ற கூற்றும். ஆகையினுலன்றே அடியில் வரும் அநுபவவாக்கியங்கள் லோகோபகாரமாய் வெளிப்பட்டன.

சமயகோடிகளெலாந் தந்தெய்வமெந்தெய்வமென்று
எங்குந்தொடர்ந் தெதிர்வழக்கிடவு நின்றதெது — தாயுமானவர்.

பேதித்தசமயமோ ஒன்றுசொனபடியொன்று பேசாது — தாயுமானவர்.

சமயவாதிகள் தத்தமதங்களில்
அமைவதாக அரற்றிமலைந்தனர் — திருவாசகம்.

அன்றென்றும் ஆமென்றும் ஆறுசமயங்கள்
ஒன்றொன்றே டொவ்வாதுரைத்தாலும் — பட்டினத்தடிகள்.

அன்றியும் சிலசமயங்கள் பாவத்தையே புண்ணியமாக விதிக்கின்றன. ஒருவன் அந்தச் சமயபோதனையைக் கைக்கொண்டொழுகினுல் அவனுக்குப்பிராப்தமாவது நரகமேயன்றி மோட்சமன்று. ஒருவேளை நரகங்கிடைக்காவிட்டாலும் அவன் மோட்சத்தை யடையாமல் பந்தநிலையை யடைவானென்பது திண்ணமன்றே. இப்படி பந்தத்துக்கேதுவான சமயங்களைக்கொள்வதும், மோட்சத்துக்குச் சாதனமான சமயத்தை அநுஷ்டிப்பதும் என்று சமயங்கள் பொதுவகையில் இரண்டுவிதப்படுதலால், பந்தநெறியை

யொழித்து மோட்சத்துக்கு வாயிலான உத்தமசமயத்தைக்கொள்ளுதல் அறிவுடையோர் செயலாம். கடவுள் தன்மையும், ஆத்மாவின் இலக்கணமும் பந்தமோட்ச இயல்பும், ஆகிய இவைகள் இத்தன்மையென நன்ருக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உள்ளபடியெடுத்துரைத்து நன்னெறியில் நிறுத்தும் சமயமெதுவோ அதையே அநுஷ்டித்தல் யாவருக்கும் இன்றியமையாத கடனும். அதைவிட்டு எந்தச்சமயத்தையுங் கொள்ளலாம்; எல்லாம் ஒன்றுதானேயென்று வரம்புகடந்து பெரியோர் ஆணைக்கும் அஞ்சாது மனத்தெழுந்தவாறு பிதற்றித்திரிதல் அறிவுடைமையாகாது. இது முக்காலும் சத்தியம்.

உலகத்துள்ள சமயங்களெல்லாவற்றுள்ளும் வேதாகமபுராண இதிகாசம் ஆகிய இவைகளாற் பிரதிபாதிக்கப்பட்ட சமயங்கள் சில. அவை யாவும் தாம் எடுத்துக்கொண்ட பொருள் நிச்சயத்துக்கேற்றவாறு ஒழுக்கங்களையும், ஞானத்தையும், பயனையும் போதிக்கின்றன. அந்தந்தச்சமயிகள் அந்தந்த ஞானத்தோடு அந்தந்த ஒழுக்கங்களையே கைக்கொண்டு அந்தந்தப்பேற்றையே யடைகின்றனர். இந்திராதி தேவர்கள், பிரமாதி கடவுளர், மகேசுர சதாசிவர்கள் ஆகிய இவர்கள் இன்னின்ன இலக்கணமுடையவர்களென்று முதன் முதல் சுருதி யுக்தி அநுபவவாயிலாக அறியவேண்டியது. இவர்களுக்குமேல் நிஷ்கள சிவம் என ஒரு பொருள் உண்டென்று உணரவேண்டியது. அதன்மேல் ஞானனந்தவஸ்துவாகிய நிஷ்களாதீத சிவம் பிரகாசித்துக்கொண் டிருக்கிறது. அதற்கு மிக்கதும் ஒப்பானதும் ஒன்றுமில்லை.

இந்திராதியர் சுவர்க்கலோகவாசிகள். பிரமா சத்தியலோகத்திலிருப்பவர். விஷ்ணு வைகுந்தலோகத்திலிருப்பவர். உருத்திரர் ஸ்ரீகண்டபுவனத்திலிருப்பவர். மகேசுரர் ஈசுவரதத்துவத்திலிருப்பவர். சதாசிவர் சாதாக்கிய தத்துவத்திலிருப்பவர். நிஷ்கள சிவத்துக்கு லயதத்துவம் இடமாகும். நிஷ்களாதீத சுத்தசிவத்துக்கோ இருப்பிடங்கிடையாது. அது தத்துவாதீதமாய் அங்கிங்கெனுதபடி எவ்விடத்தும் நீக்கமறநிறைந்து சர்வபரிபூரணமாய்ப் போக்குவரவின்றி விளங்காநிற்கும்.

ஆத்மாக்கள் மேற்சொன்ன எந்தெந்த தெய்வத்தை வணங்குகின்றார்களோ அந்தந்த தெய்வம் வாழும்பதவியையே அல்லது அதன் நிலையையே அடைகின்றனர். இந்திராதியரை யாகாதிகர்மங்களால் வழிபட்டோர் சுவர்க்கலோகத்தையடைவர். பிரமாவை

வழிபட்டோர் சத்தியலோகத்தையடைவர். விஷ்ணுவை வழிபட்டோர் வைகுந்தம் புகுவர். உருத்திரரை வணங்கினோர் ஸ்ரீகண்ட புவனமாகிய பதமுத்தியையடைவர். மகேசுர சதாசிவர்களையும் நிஷ்கள சிவத்தையும் ஆராதித்தோர் அவரவர் பதங்களாகிய ஸ்ரீகண்ட புவனத்தின்மேலும் சுத்தவித்தைக்குக் கீழுமுள்ள புவனங்களாகிய பதமுத்தியையே பெறுவர். ஞானானந்த வஸ்துவாகிய சுத்த சிவத்தை ஞானத்தால் வழிபட்டோர் அபரமுத்தியையும் ஒப்புயர்வற்ற பரமுத்தியையும் அடைவர்.

இனி வேதநெறியின்கண்ணேநிற்கின்ற வைதிகருட் சிலர் இந்திராதியரை வணங்குவர். இரண்ணியகர்ப்ப மதத்தரும் வைதிகருட் சிலரும் பிரமாவை வணங்குவர். வைணவரும் வைதிகருட் சிலரும் விஷ்ணுவை வணங்குவர். சைவருட் சிலர் அதாவது சரியையாளர் உருத்திரரை வணங்குவர். கிரியையாளர் மகேசுர சதாசிவர்களை வணங்குவர். யோகியர்கள் நிஷ்களசிவத்தை வணங்குவர். வைதிக சைவ ஞானிகள் சுத்தசிவத்தை ஞானத்தால் வழிபடுவர். உண்மை இவ்வாறிருக்க, எந்தச் சமயத்தை அநுஷ்டித்தாலும் மோட்சங் கிடைத்துவிடுமென்று பொதுமையாய் எண்ணுவது தவறன்றோ? சுவர்க்கலோக வாழ்வுவேறு, சத்தியலோக வாழ்வுவேறு, வைகுந்த லோக வாழ்வுவேறு. இவைகளைப் பந்தநிலையென்று வேதம் அறுதியிடாநிற்கும். அப்படியிருக்க அவைகளை எப்படி மோட்சமென்றியம்புவது?

அல்லாமலும் பதமுத்தியும் அபரமுத்தியும், பரமுத்தியும் ஒன்றாகுமோ? பதமுத்தியடைந்தவர் மீள ஒருபிறவியைப்பெற்று அப்பிறவியிற்றானே மேற்படிகளிலேறி ஞானவழிபாட்டால் வீடுகூடுவர். அபரமுத்திபெற்றோர் அப்பதம் லயமாகும்போது பரமுத்தி பெறுவர். இவ்வாறு தெய்வவழிபாடும் அதன் பயனும் அரவர் பக்குவநிலைக்குத் தக்கவாறு அமைந்திருக்கின்றபடியால் எல்லா வழிபாடுகளும் வேண்டப்படுவனவேயன்றி அவை யாவும் ஒரே பயனைத் தருமென வாதித்தல் நகைப்புக்கிடமாவதோடு முற்றும் அசம்பாவிதமாகும்.

நாம் தாங்கிக்கொண்டிருக்கும் இந்தச்சரீரம் நிலையுடையதல்ல. எந்தக்கணத்தில் மரணம் வருமோ நமக்குத்தெரியாது. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ யாதுவருமோ அதுவும்; அறிகிலோம். ஆதலால் இந்தச் சரீரம் உள்ளபோதே காலத்தை அவல

மாக்காது உண்மைநிலையையுணர்ந்து வீடடைவதற்கு ஏற்ற ஞான சாதனங்களை அநுஷ்டித்தல் முறையாம். உள்ளவாறு உண்மை ஞானத்தையளித்து உண்மைமோட்சந்தரவல்ல எல்லா இலக்கணமும் இயல்பாக அமைந்துள்ள சமயம் வைதிகசைவம் ஒன்றேயாம். அதையே "முத்திப்பழம் பழுக்கும்," "மோகக்கொடியறுக்கும்" என்று ஞானிகள் புகழ்ந்துள்ளார்கள். ஆதலால் அத்தகைய வைதிக சைவத்தைச் சாரும் ஊழ் அளவிறந்தகோடி ஜன்மங்களிலே செய்த புண்ணியவசத்தாற்பெற்றும் அதன் அருமை பெருமைகளை ஆராய்ந்துணராமலும், அதன் உத்தம உபதேசங்களைக் கைக்கொள்ளாமலும், சாவிபோம் ஏகான்மவாத முதலிய சமயங்களைத் தழுவி உண்மையான மோட்சத்தை இழத்தல் தகாதகாரியமாகும். இதனால் ஒருவன் தன்முன்னோர் பாரம்பரியமாய் அநுஷ்டித்துக் கொண்டுவந்த சமயத்தைக்கைவிட்டு வைதிக சைவத்தைத் தழுவ வேண்டுமென்பது எமது கருத்தன்று. அவனது பூர்வவினைக்கேற்ப அவனுக்குக் கிடைத்தசமயம் எதுவோ அதனையே அவன் கைக்கொண்டொழுகி அதன்பயனைப்பெறலாம். இவ்வுண்மையினையே திருத்தாண்டகவேந்தரும் "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்தே - எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அவனும் காலக்கிரமத்திலே முதிர்ந்தபரிபாகம்பெற்று, வைதிக சைவநெறியைப் பேணி, அதில் சரியை கிரியா யோகங்களை அநுஷ்டித்து அந்த முதிர்ச்சியினாலே ஞானமுண்டாய் அந்த ஞானத்தினாலே பரமுத்தியடைவானென்பது ஒருதலை. ஆயின் வைதிக சைவநெறியைத் தவிர்த்து ஏனைய வைதிகமதத்தில் நின்றவர்களுக்குப் பரமுத்திகிட்டாதோவெனில், அவர்களும் தற்போதவொழிவின்பொருட்டுச் சைவத்திறத்தையே மேற்கொண்டொழுகவேண்டியவர்களாயுள்ளார்கள். அதனால் சித்தாந்த சைவமாகிய வைதிக சைவமே முத்திக்குநேர் வழி. அதுவே உய்யுநெறி. அதைவிட்டு 'எந்தச் சமயத்தைக் கொள்ளினுங் குற்றமில்லை, எதனையுங்கொள்ளலாம்' என்பது ஒப்பத்தக்கதல்ல. வைதிக சைவர்கள் வைதிக சைவத்தையே கொள்ள வேண்டுமேயன்றி பிறிதொன்றை மறந்துங்கொள்ளலாகாது. சுபம்.

மெய்கண்டநாதன் றுணை.

சோளங்கிபுரம் - சிவஅருணகிரிமுதலியார்.

# பரமதபங்க வினாவிடை.

(82-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்வாறு பிரசங்கித்து ஞானமழை பொழிந்துநின்ற சைவாசாரியரை அங்கு வந்திருந்த புத்தருஞ் சமணரும் ஏனைய புறச்சமயிகளும் பணிந்து, தேவரீரது போதம் எங்களது சந்தேகங்களையொழித்துவிட்டது. நாங்கள் புத்தியே தெய்வமென்று பொங்கிவழிந்ததும், குணமே தெய்வமென்று கொண்டாடனடித்ததும், பிராணனே தெய்வமென்று பரிபவப்பட்டதும், கர்மமே தெய்வமென்று காலம்போக்கியதும், காலமே தெய்வமென்று கட்டியழுததும் எங்கள் வினையின் பெருக்கென்றே வெய்துற்றயர்ந்தோம். எங்களைத் தேவரீரது திருவடிக்காட்படுத்தி முற்றும் பாலிக்கவேண்டியது எங்கள் குருமணியே! என்று விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள். அவர்களைக் கையமர்த்தி, இனிய வசனங்கள் கூறி யெழுந்தருளியிருந்த குருமூர்த்தியை ஏகான்மவாதி யொருவனெழுந்து சில கேட்கத் தொடங்கினான்.

## மாயாவாத மதபங்கம்.

ஏகான்மவாதி. ஐயா, உமது பிரசங்கத்தை நீர் ஆரம்பித்தது முதல் கேட்டுவந்தேன். உமது சைவசமயத்தை அதிகமாகப் புகழ்ந்தீர். இதர சமயங்களை வெகு வாயிகழ்ந்தீர். அவற்றுள்ளும், எமது வேதாந்த மதத்தை எங்குமில்லாமற் பேசினீர். யாம் சில கேட்கின்றோம் சொல்லுகின்றீரா?

சை. சம்பிரமமாய்க் கேட்கலாம், ஒருதடையுமில்லை.

ஏ. ஆன்மா அறிவினையுடையது என்று ஒப்பிய நீர் அவ்வான்மாவுக்குமேலொரு பரமிருப்பதாக வாதிப்பது யாங்ஙனம்? தீபம் ஒளியினையுடையது என்றதன் பின்னர், தீபத்துக்குமேலொரு தீபமுளதென வாதித்தல்கூடுமோ?

சை. தீபத்துக்குமேலொரு தீபமிருப்பதாக யாம் கூறேம். எத்தனை தீபமானாலும் முடிவில் அத்தனையும் ஒரு தீபமே. ஒன்றுயிருந்தபோது அத்தீபம் தன்னையும் பிறபொருள்களையும் விளக்கியவாறு அது பலவாக விஜ்ரும்பித்தபோதுந் தன்மை மாறுமலிருக்கக்கண்டோம். இவ்வுபமானம் நீர்கூறும் ஏகான்மவாதத்துக்கு மெம்மட்டிலுபகாரமென்பதை நீரே யோசித்துப்பாரும்.

ஏ. ஆன்மா ஒன்றாயிருந்தபோதும், அது பலவானபோதும் நீர் கண்ட வேறுபாடு யாது?

சை. ஒன்றாயிருந்த ஆன்மா பலவாயிற்று என்பது உமது மதம். யாமவ்வாறு கூறகில்லேம். ஆன்மாக்கள் பல முதல்களென்பதே எமதுமதம்.

ஏ. எமதுமதத்தின்பேரில் நீரேற்றுந் தூஷணந்தான் யாது?

சை. உமது ஆன்ம விலக்கணத்தை முன்பு கூறிமுடியும். பின்னர் யாம் சொல்லுவதைச் சொல்லுகிறேம்.

ஏ. ஆன்மா வொன்றேயுள்ளது. அதனையே சிவம்-பிரமம்-கடவுள்-தெய்வம் என்று பலபெயர்களால் பெரியோர் கூறுகின்றனர். அவ்வான்மா அறிவே வடிவமாயுள்ளது. அதற்கு இரண்டாவதுபொருள் வேறொன்றில்லை. அதுவே சகசீவ பரங்களாய் விரிந்திருக்கின்றது.

சை. உமது ஆன்மாவைச் சிவம், பிரமம் முதலிய நாமங்களால் நீர் கொண்டாடுவதன் முன்னர், அதனது யோக்யதை குன்றாமலிருக்கப் பார்த்துக்கொள்ளும். என்னெனின், ஆன்மா அறிவு வடிவ மென்றீர். அது எப்படி அறிவுவடிவம்? உலகாயதன் தனது தெய்வமாகிய பூதங்களை அறிவற்றஜடம் என்று அங்கீகரித்துக்கொண்டான். அது சத்தியம். அப்படியே அவன் காட்டுகிறான். யாமுங்காணுகிறேம். நீர் பரத்துவஞ் சாதிக்க வந்த ஆன்மா அறிவுவடிவ மென்பதனை எங்ஙனம் ருசுப்படுத்துவீர்?

ஏ. இதோ உம்மோடு விவகரித்துவருகிற என்னையே (ஆன்மா அறிவுவடிவ மென்பதற்கு) சாட்சியாகக் கொள்ளலாம்.

சை. எம்மோடு வார்த்தை சொல்லும் நீர் அறிவுமாத்திரமாகத் தனித்திராமல் தேகேந்திரிய பிராணாந்தக் கரணங்களோடு கூடியிருக்கின்றீர். சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் அவத்தைகளின்மொத்துண்டு திரிகின்றீர். எம்மோடு நீர் விவகரிக்கும் இந்தச் சமயம் சாக்கிரசமயம். இப்போது முப்பத்தைந்து கருவிகளின் சார்பால் நான் அறிஞனென்று வெளி வந்திருக்கின்றீர். நீர் சொப்பனத்தை யடைந்தால் அந்த இடத்தில் பத்துக்கருவிகள் குறைதலால், உமது யோக்யதை

மட்டிடுகின்றது. சுழுத்தியிற்போனால் பின்னும் இருபத்திரண்டு கருவிகள் அடங்கிவிடுகின்றன. இம்மூன்றவத்தைகளுக்குமேல் துரீயம், துரியாதீதம் என்னும் அவத்தைகளையடைந்தால், எஞ்சிய மூன்று கருவிகளில் இரண்டடங்கிவிடுகின்றன. துரியாதீதத்தில் ஒரேகருவி துணைசெய்யப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு அறிவிருந்தவிடமே தெரியாமல் கிடக்கிற ஆன்மாவாகிய உம்மை, "நான் அறிவுவடிவமாயிருக்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டது உமக்கு நாணத்தைத் தரவில்லையா? உமக்கு கருவிகள் ஏறியபோது அறிவு ஏறியும், கருவிகள் குறைந்தபோது அறிவுகுறைந்தும் வருதலால் உமது அறிவு மதம் அறிவற்ற மதமாயிற்று.

ஏ. ஆயின் உமதுபட்சம் ஆன்மாவுக்குக் கருவிகளே அறிவையுண்டாக்கியது என்பதோ?

சை. சாக்கிரமுதலிய அவத்தைகள் உமது மதத்துக்கொப்பாகாத பட்சத்தில் நீர் அவ்வாறு கேட்கலாம். இவ்வவஸ்தா பஞ்சக நிரூபணம் வேதசம்பந்திகள் யாவரு மொப்புக்கொண்டதாகையால், நீர் வழவழவென்றுபேசிப் பதுங்குவது சரியன்று.

ஏ. நீர்கூறும் முடிவுதான் யாது?

சை. "ஆன்மா ஏகம், அதன்வடிவம் அறிவு'' என்று பிரசங்கித்தவாறு எமக்குக் காட்டுவதே நீர் செய்யத்தக்கது. இது உம்மாலும் முடியாது, உமது மூலகுருவாகிய சங்கராசாரியராலும் முடியாது.

ஏ. ஆன்மா அறிவுவடிவம் என்பது உமது சைவசித்தாந்தத்தில் ஒப்பில்லையோ? ஆன்மா அறிகின்றவனும், சிவன் அறிவிக்கின்றவனு மாயிடுதல் சித்தாந்திகள் பட்சமன்றோ? இதனை அங்கீகரிக்கும்போது, ஆன்மா அறிவுவடிவம் என்னுமெமதுபட்சங் கெடுமாறெங்ஙனம்? அறிவிக்கின்ற அறிவு வேறென்றில்லையென்பது மாத்திரமே சித்தாந்தபட்சத்துக்கு விரோதமாகலாம். இதற்கு என்ன சொல்லுகிறீர்?

(இன்னும் வரும்.)

## சிவபெருமான் தோத்திரப் பிரியர்.

சிவபெருமானுக்குச் செய்யப்படும் உபசாரங்களெல்லாவற்றுள்ளும் அவரால் அதிகமாக விரும்பப்படுவது அவரைத் தோத்திரம் செய்தலாகிய உபசாரம் ஒன்றேயாம். இதுபற்றியே வேதாகமங்கள் அவரைச் "சாமவேதப் பிரியன்,, என்று கூறும். தமிழ் வேதமும் அவரைக் "கீதத்தை மிகப்பாடுமடியார்கள் குடியாகப்-பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி" எனவும், "பண்ணொன்ற விசைபாடு மடியார்கள் குடியாக—மண்ணின்றி விண்கொடுக்கு மணிகண்டன்" எனவும், "வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டரினத் தகத்தான்" எனவும் முழங்குகின்றது. அன்றியும், திருத்தொண்டத் தொகையில் "பரமனையே பாடுவாரடியார்க்கு மடியேன்" என்று பாடற்றொண்டு செய்வாரைத் தனியாயெடுத்துப் போற்றுகின்றது. பின்னும், கைலைமால்வரையைப் பெயர்க்க முயன்று தம் காற்பெருவிரலால் நசுங்குண்டு வருந்திக்கிடந்த இராவணனுக்கும் அவன்பாடிய கீதத்தின் வசப்பட்டு இறைவர் அருள் செய்த பிரபாவத்தைத் தமிழ்வேதம் போற்றாத இடமில்லை. அல்லாமலும்,

> விளக்கினார் பெற்றவின்ப மெழுகினாற் பதிற்றி யாகும்
> துளக்கினன் மலர்தொ டுத்தாற் றூயவிண் ணேற லாகும்
> விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
> அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகடா மருளு மாறே.

என்னுந் திருநேரிசையால் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருப்பள்ளித் தாமந்தொடுத்தல், திருவிளக்கேற்றல் என்னும் தொண்டுகள் ஒவ்வொன்றுக்கும் உண்டாம் பலன்களை வரையறுத்துக்கூறி, பாடற்றொண்டினாலுண்டாகும் பலன்வரையறுக்கப்படாதது என்பதை வற்புறுத்துகின்றது.

குமரகுருபரசுவாமிகளும் தாம் அருளிச்செய்த திருவாரூர் நான்மணிமாலையில்

> தண்மலரும் பொழிற் றென்கம லேசர்க்குச் சாத்துகின்ற
> வொண்மலர் சொன்மலர்க் கொவ்வாது போலுமற் றோர்புலவன்
> பண்மலர் சாத்திப் பணிகொண்ட வாபச்சை மால்சிவந்த
> கண்மலர் சாத்தியுங் காண்பரி தானகழன் மலரே.

என்னும் செய்யுளில், "திருமால் தமது கண்ணாகிய மலரைப் பறித்து அருச்சித்தும் காணவரிதாய் நின்ற சிவபெருமானுடைய கழற்கான் மலரை, சுந்தரமூர்த்திசுவாமிகள் பாமாலை சாத்திப் பரவை நாச்சியாரிடம் தூதுபோம்படி செய்துகொண்டனர். ஆதலால், சிவபெருமானார்க்குப் பூமாலையினும் பாமாலையில் விருப்பம் அதிகம்" என்று திருட்டாந்த பூர்வமாக விளக்கியருளினர். மேலும், மாணிக்கவாசகப்பிரான் மதுரவாசகத்திற் காசைப்பட்டு, இறைவனார் மண் சுமந்து அடியும்பட்டதன்றி அவர் செய்த தோத்திரங்களை ஏடும் எழுத்தாணியுங் கொண்டு எழுதிவைத்துக்கொண்டனர். இவற்றால் சிவபெருமான் தோத்திரப்பிரியர் என்பதும் அவருக்குச் செய்யப்படும் உபசாரங்களெல்லாவற்றுள்ளும் மிகச்சிறந்தது தோத்திரமேயாமென்பதும் விளங்கும்.

சிவபெருமான் தோத்திரப்பிரியராயின் அவர் சில இழிந்த மாந்தர்களைப்போல் புகழ்ச்சி விருப்பர் எனவும் விருப்பு வெறுப்பும் இன்பதுன்பங்களும் உடையவரெனவும் கொள்ளவேண்டி வருமே எனின், வராது. அவரைத் தோத்திரப்பிரியர் என்று கூறும் நூல்களே விருப்பு வெறுப்பில்லாதவர் என்றும் கூறுகின்றன. நூல்கள் அவ்வாறு கூறுவது ஒன்றோடொன்று மாறுபடக் கூறுவதாகாதோவெனில், ஆகாது. ஏனெனில் சிவபெருமானுக்கு இயற்கையாகவே உள்ள நிலைகள் இரண்டு. அவை சொரூபமும் தடத்தமுமாம். இவற்றுள் சொரூபநிலையை நோக்க அவர் குணம் குறி செயல் முதலியன வொன்றும் இல்லாத சச்சிதானந்தப் பரம்பொருள் என்று சொல்லப்படுவர். தடத்த நிலையை நோக்க அவர் பல நாமங்களும் வடிவங்களும் குணங்களும் செயல்களும் உடையவர் என்று சொல்லப்படுவர். இவ்விரண்டு நிலைகளுள் சொரூபநிலையே அவரது உண்மைநிலை. தடத்தநிலை யென்பது ஆன்மாக்களின் மீதுவைத்த பரம காருணியத்தால் அவைகளின் பலவகைப்பட்ட பக்குவங்களின்படி அவற்றின் கருமேனி கழிக்கவெடுத்த கருணையின் வடிவங்களும், குணங்களும், செயல்களும் பொருந்திய நிலையாம். சிவபெருமானுக்கு இவ்வகையான நிலைகள் இரண்டு உண்டு என்பதைச் சனங்கள் பலர் அறியாமைபால் அவர்கள் பால் அளவிறந்த சந்தேக விபரீதங்கள் விளைகின்றன; சிவபெருமான் வேறு தாங்கள் வழிபடும் தெய்வம் வேறு என்று பிறசமயத்தவர்கள் தடுமாறுகிறார்கள். இவ் வுண்மையை யுணர்வார்க்குச் சிவபெரு

மானே எல்லாச் சமயத்தினரும் "தந்தெய்வம் எந்தெய்வம்" என்று வழிபடும் முழுமுதற் கடவுள் என்பது விளங்கும். இது பற்றியே அருணந்திசிவாசாரியசுவாமிகளும் "யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொருபாகனார் தாம் வருவர்" என்றருளிச் செய்தனர். சில மதத்தினர் கடவுளின் சொரூபநிலையை மாத்திரம் அங்கீகரித்துக்கொண்டு அவர் உலகத்தைப் படைத்தார் என்றும், உயிர்களுக்குத் தம் அருளை வழங்குகின்றார் எனவும், தம்மை நேசித்தவரை நேசித்து நேசியாதவர்களை வெறுக்கின்றார் எனவும் கூறுவர். சொரூப தடத்த நிலைகளின் இலக்கணங்களையுணராமையால் இவர்கள் இவ்வாறு கூறி யிடர்ப்படுகின்றார்கள். கடவுளுக்குச் சொரூப இலக்கணம் அங்கீகரிக்கப் படாவிட்டால் அவருக்குச் சர்வவியாபகம் முற்றுமுணர்தல் நித்தியத்துவம், மலமின்மை, பேரின்பமுடைமை முதலிய சிற்குணங்கள் கூற இடமிராது. அவருக்குத் தடத்த விலக்கணம் அங்கீகரிக்கப் படாவிடில் அவர்படைப்பு முதலிய தொழில்களைச் செய்கின்றார் என்றுகூற இடமிராது.

சிவஞானசித்தியார்.

படைப்பாதி தொழிலும் பத்தர்க் கருளும் பாவனையு நூலு
மிடப்பாக மாதராரோ டியைந் துயிர்க் கின்ப மென்று
மடைப்பானு மதுவு முத்தி யளித்திட வியோகும் பாசந்
துடைப்பானுந் தொழிலுமேனி தொடக்கானேற் சொல்லொணாதே.

ஆதலால் அவருக்கு இவ்விருநிலைகளும் என்றும் உள்ளனவென்றே உண்மை நூல்களாகிய வேதாகமங்கள் கூறும். இவ்வுண்மையை விளக்கவேண்டியே திருவாசகம் "இன்பமுந் துன்பமும் இல்லானே யுள்ளானே" என்றருளிச்செய்தது. இன்பமும் துன்பமும் இல்லாத நிலையே அவருடைய சொரூப நிலையும், அவையுள்ள நிலையே தடத்தநிலையுமாம். தடத்தநிலையில் அவர் இன்பதுன்பங்கள் முதலியன உடையவராயிருத்தலும் தம்பொருட்டன்றி ஆன்மாக்களின் பொருட்டேயாம். அவர் தடத்த நிலையில் இன்பதுன்பங்கள் முதலியன உடையவராயிருந்தும், "தாரணியில் இந்திரசாலம்புரிவோன் தான்மயக்குந் தந்திரத்திற் சாராது சார்வதுபோல்" அவற்றால் சிறிதும் தாக்கற்று நிற்பர். ஆதலால் தடத்த விலக்கண முடைமையால் அவருடைய சொரூபவிலக்கணத்திற்கு வருவதோர் இழு

க்கின்மையறிக. இதனை முதன்மலர் பத்தாம் இதழில் முன்னமே விளக்கினேம்.

இனி, தடத்தநிலையிலும் அவர் புகழ்ச்சியை விரும்புவது குற்றமன்றோ வெனின், கூறுவாம். மனிதர்கள் அவரைப் புகழ்வதனால் அவருக்கு வருவதோர் பயனில்லை. தாம் வாழும் பொருட்டும், பிறவிக்கடலினின்றும் கரையேறியுய்யும் பொருட்டுமே தேவர்களும் மனிதர்களும் அவரை வாழ்த்தி வழிபடவேண்டியவர்களாயிருக்கின்றார்கள்.

திருவாசகம்.

வாழ்த்துவதும் வானவர்கடாம் வாழ்வான் மனநின்பாற்
றாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்து மதுகரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்த பிறப்பறுத் திடுவான்யானு முன்னைப் பரவுவனே.

அவரைப் புகழ்வதனால் எப்படி வாழ்ந்து உய்யலாம் எனின், கூறுவாம். மனிதர்களாற் செய்யப்படும் கடவுள் வழிபாடு மனம் வாக்கு காயம் என்னும் மூன்றினாற் செய்யப்படும். இம்மூன்றனுள் காயத்தாற்செய்யப்படும் தொண்டுகளைக் காட்டிலும் வாக்கினாற் செய்யப்படும் தொண்டும், வாக்கினாற்செய்யப்படும் தொண்டைக் காட்டிலும் மனத்தாற்செய்யப்படும் தொண்டும் அதிகபலனைத் தருவனவாம். திருவலகிடுதல் முதலியன காயத்தாற் செய்யப்படுவன. பாடற்றொண்டு வாக்கினாற் செய்யப்படுவது. ஆதலால் தோத்திரஞ் செய்தலாகிய பாடற்றொண்டு திருவலகிடுதல் முதலிய காயத் தொண்டுகளைக் காட்டிலும் அதிக பலனைத் தருவதாம். காயத்தொண்டுகள் செய்தற்கு அதிக அறிவு விளக்கம் வேண்டுவதின்று. பாடற்றொண்டு செய்தற்கு அறிவு விளக்கம் மிகவும் வேண்டும். இறைவனுருடைய அளவுபடாத பெருமைகளையும், ஆன்மாக்களின் சிறுமைகளையும், அவர் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பிரபாவங்களையும் உணர்ந்தவர்களே மனங்கசிந்து அவரைப் புகழ்ந்து போற்றற்குரியராவர். அன்றியும், மனங்கசிந்துருகாதபோது கடவுள் வழிபாட்டினால் மிகுந்தபலன் உண்டாகாது. மனமானது இசையால் உருகும் இயற்கையுடையது. ஆதலால், இசையோடுகூடிய பாடல்களால் கடவுளைத் தோத்திரஞ்செய்வதனால் மனம் உருகி அன்பு பெருகும். மேலும், சிவபெருமானை வேதம், "ஸ்வரமயன்" என்று கூறுகின்றது. தமிழ்வேதமும் "மிக நல்ல வீணை தடவி"

எனவும், "ஏழிசையாய் இசைப்பயனாய்" இருப்பவன் என்றுங்கூறுகின்றது. பின்னும், பாட்டானது பாடுவார் மனத்தை மாத்திரமன்றிகேட்போர்மனதையும் உருக்கவல்லது. இதுபற்றியே நமது சமயாசாரியர்கள் பாடற்றொண்டைக்கடைப்பிடித்து தேவாரத் திருமுறைகளைப் பாடியருளி உலகை வாழ்வித்தார்கள்.

இதுவரையிற் கூறியவற்றால் சிவபெருமான் தோத்திரப் பிரியர் என்பதின் கருத்தும், தோத்திரஞ்செய்தற் றொண்டின் சிறப்பும் விளங்கும்.

இக்காலத்தில் பலர்கோயில்களைக் கட்டுகிறார்கள்; நந்தனவனம் வைத்து புட்பகைங்கரியங்கள் செய்கிறார்கள்; அபிடேகாதியுபசாரங்கள் செய்விக்கிறார்கள்; மகோற்சவம் செய்கிறார்கள். ஆனால், இறைவனை வாயாரப்பாடி தோத்திரம் செய்வாரும்,செய்விப்பாரும் அரியராயிருக்கின்றனர். இதற்குக் காரணம் நம்மவர்களுக்குத் தோத்திரஞ்செய்தற்கு அத்தியாவசியமான கல்வி யறிவு இல்லாமையேயாம். ஆதலால் பலர் ஆலயங்களுக்குப் போய் தாம் இன்னது செய்வதென்று தெரியாமல் அர்ச்சகரிடத்தில் தேங்காய் பழமுதலியனகொடுத்து ஊமரைப்போல நிற்கிறார்கள். சிலர் படித்துப் பாடக்கற்றிருந்தும் வாயாரத் தோத்திரஞ்செய்யக் கூசுகிறார்கள். சிலர் வாய்திறந்து பாடுவதைக் கௌரவக்குறைவாக எண்ணுகிறார்கள். பலர் இன்ன இன்ன தெய்வங்களிடத்தில் இன்ன இன்ன தோத்திரங்களைப் பாடல்வேண்டுமென்பதை யறியாமல் தங்கள் வாயில் வந்தபாட்டையெல்லாம் பாடுகின்றார்கள். பலமாதரைக் கூடித் தூர்த்தனாய்த் திரியும் ஒருவன் சிவ சன்னிதியில் நின்றுகொண்டு "வாராண்ட கொங்கையர் சேர்மனையிற் சேரோம்" என்னும் திருத்தாண்டகத்தைப் பாடுகிறான். திருநீறு பூசக் கூசிப்புனுகு ஜவ்வாது கலந்த திலதமிட்டுக்கொண்டிருக்கும் ஒருவன் "நீறணியுங் கோலமே நிகழப்பெற்றோம்" என்று பாடுகிறான். குடும்பச்சேற்றில் அழுந்தி இரவும் பகலும் பலவழியிலும் பொருளைத்தேடி பாதுகாப்பவன் "உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்" என்று பாடுகிறான். ஒருவன் தான் உபாத்தியாயரிடத்தில் சிறுபோதில் ஒப்புவித்ததுபோல் "கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும், அவையல்ல நல்ல மரங்கள்-சவைநடுவே, நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய, மாட்டா தவனன் மரம்" என்பன வாதியாய நீதிநூற்பாட்டுகளைப் பாடுகின்றான். காதலா

கித் கசிந்து கண்ணீர் மல்கி தோத்திரஞ் செய்வாரைக் காண்பது அரிதாயிருக்கிறது. சிவபெருமானிடத்தில் மெய்யன்பு செலுத்த விரும்புவோர் அவருடைய பிரபாவங்களை விளக்கும் நூல்களைக் கற்று அவரைவாயாரத் தோத்திரஞ் செய்தல்வேண்டும். அவர் பெருமைகளைக் கல்லாதபோது அவரை வாயார வாழ்த்துவதும், வாழ்த்தி யவரருளைப் பெறுதலும் கூடாமையாம். இதுபற்றியே தமிழ்மறை "கல்லா நெஞ்சில் நில்லா னீசன்'' எனவும், "கற்றவர் விழுங்குங் கற்பகக்கனி'' என்றும் அருளிச்செய்தது.

மனிதர்கள் தாம் உய்தற்குச் சிவபெருமானை வாயாரத் தோத்திரஞ் செய்தல் அவசியமாதல்போல், உலகம் உச்சிவித்தற்கு சனங்களுக்கு ஞான நூல்களைக் கற்பித்து இறைவனை யேத்தச்செய்தலும் அத்தியாவசியமாம். இதனை இக்காலத்துச் சைவப்பிரபுக்கள் உணராமலும், உணர்ந்தவிடத்துக் கவலையில்லாமலும் வாளாவிருப்பதனால், சைவர்கள் எண்ணிறந்தோர் சமயக்குருடர்களாகவும் ஊமைகளாகவும் இருக்கின்றார்கள். ஆதலால் இனியாவது சிவபுண்ணிய பரிபாலனம் செய்யும் சைவப்பிரபுக்கள் பல விடங்களிலும் பாடசாலைகள் வைத்துக் கல்விகற்பித்து சனங்கள் சிவபெருமானை வாயாரத் தோத்திரம் செய்யுமாறு செய்தல்வேண்டும். இப்போது நடக்கும் உற்சவாதிகளால் சனங்கள் சுவாமிக்குச் சாத்தும் ஆடையாபரணங்களைப் பார்த்தும், புட்பமாலைகளைப் பார்த்தும், தீவட்டி மத்தாப்பு முதலியவைகளைப் பார்த்துமே சந்தோஷித்துப் போகின்றனரேயன்றி இறைவருடைய பெருமையைச் சிந்தித்துச் சிந்தித்து நெக்கு நெக்குருகிப் பாடுகின்றாரல்லர். ஆதலால் சைவப்பிரபுக்கள் சிலர் பெரும் பொருளைச் செலவிட்டுச் செய்யும் கைங்கரியங்கள் பலவும் அவற்றால் சனங்கள் அடையக்கூடிய பலன்கள் அவ்வளவும் கொடுப்பனவாயில்லை. ஆதலால் உலகம் உய்யவேண்டி பதிபுண்ணியம் செய்யவிரும்பும் சைவப்பிரபுக்கள் எங்கும் பாடசாலை வைத்து அவைகள் மூலமாய் சனங்கள் எங்கும் தனித்தனியாகவும் கூட்டம் கூட்டமாய்க் கூடியும் சிவபெருமானை மனங்கசிந்து வாயாரத் தோத்திரம் செய்யுமாறு செய்தல்வேண்டும். இப்படிச் செய்தலே மற்றெல்லாவித கைங்கரியங்களினும்பன்மடங்கு மேலான கைங்கரியமும் தங்கள் கடமையுமாம் என்பதை மறக்கலாகாது.

திருவாசகம்.

ஆடுகின்றிலைகூத்து, உடையான் கழற்கன்பிலை, யென்புருகிப்
பாடுகின்றிலை, பதைப்பதுஞ்செய்கிலை, பணிகிலை, பாதமலர்
சூடுகின்றிலை, சூட்டுகின்றதுமிலை, துணையிலி பிணநெஞ்சே,
தேடுகின்றிலை, தெருவுதோறலறிலை, செய்வதொன் றறியேனே.

(பத்திரிகாசிரியர்.)

---

# கோச்செங்கட்சோழநாயனார் புராணம்.

மைவைத்த கண்ட னெறியன்றி மற்றோர் நெறிகருதாத்
தெய்வக் குடிச்சோழன் முன்பு சிலந்தியாய்ப் பந்தர்செய்து
சைவத் துருவெய்தி வந்து தரணிநீ டாலயங்கள்
செய்வித் தவன்றிருக் கோச்செங் கணானெனுஞ் செம்பியனே.

செம்பொ னணிந்து சிற்றம் பலத்தைச் சிவலோகமெய்தி
நம்பன் கழற்கீ ழிருந்தோன் குலமுத லென்பர்நல்ல
வம்பு மலர்த்தில்லை யீசனைச் சூழ மறைவளர்த்தா
னிம்ப நறுந்தொங்கற் கோச்செங்க ணானெனு நித்தனையே.

சோழமண்டலத்திலே, சந்திரதீர்த்தத்தின் பக்கத்திலே ஒரு வனம் இருந்தது. அதிலே நின்ற ஒரு வெண்ணாவன் மரத்தின்கீழே ஒரு சிவலிங்கம் வெளிப்படலும், ஒரு வெள்ளானை அதைக்கண்டு, நாடோறும் புழைக்கையினாலே தீர்த்தம் முகந்து ஆட்டி, புஷ்பங்களைச் சாத்தி, வழிபட்டு ஒழுகுவதாயிற்று. அதனால் அந்தஸ்தலத்துக்குத் திருவானைக்கா என்று பெயராயிற்று. அறிவினையுடைய ஒரு சிலந்தி, அந்தச்சிவலிங்கத்தின்மேலே சருகு உதிராவண்ணம், தன் வாய்நூலினாலே மேற்கட்டி செய்தது. சிவலிங்கத்தை வணங்க வந்த வெள்ளானை அதைக்கண்டு, அது அநுசிதம் என்று நினைந்து, அதைச் சிதைக்க; சிலந்தி மீளவும் மேற்கட்டி செய்தது. வெள்ளானை மற்றநாளும் அதைச் சிதைத்தது. அது கண்டு சிலந்தி "எம்பெருமான் மேலே சருகு உதிராவண்ணம் நான் வருந்திச் செய்த மேற்கட்டியை இது அழிக்கலாமா" என்று கோபித்து வெள்ளானையினது புழைக்கையினுள்ளே புகுந்து கடிக்க வெள்ளானை கையை நிலத்திலே மோதிக்கொண்டு விழுந்து இறந்தது. கையை மோதியபோது, அதனுள்ளே புகுந்த சிலந்தியும் இறந்தது. வெள்ளானை சிவகணநாதராகித் திருக்கைலாசமலையை அடைந்து, சிவபெருமானைச் சேவித்துக்கொண்டிருந்தது.

சுபதேவனென்னுஞ் சோழமகாராஜன் தன் மனைவியாகிய கமலவதியுடன் சிதம்பரத்தையடைந்து, சபாநாயகரை உபாசனைசெய்துகொண்டிருக்குநாளிலே, கமலவதி புத்திரபாக்கியம் இன்மையால் வரம்வேண்ட, அந்தச்சிலந்தி சபாநாயகரது திருவருளினாலே அவளுடைய வயிற்றிலே மகவாய்வந்து அடைந்தது. கமலவதிக்குப் பிரசவகாலம் அடுத்தபொழுது, சோதிடர்கள் "இப்பிள்ளை ஒருநாழிகை கழித்துப் பிறக்குமாகில், முப்புவனங்களையும் அரசாளும்" என்றார்கள். கமலவதி "என்பிள்ளை இப்போது பிறவாமல் ஒருநாழிகை கழித்துப் பிறக்கும்படி என்னைத் தலைகீழாகக் கட்டித்தூக்குங்கள்" என்றுசொல்ல; அங்குள்ளவர்கள் அங்ஙனங்கட்டித் தூக்கி, சோதிடர்கள் குறித்தகாலம் அணையக் கட்டவிழ்த்து விட்டார்கள். கமலவதி பிள்ளையைப்பெற்று, அதுபிறக்குங்காலந் தாழ்ந்தமையாற் சிவந்த கண்களையுடையதாய் இருத்தல்கண்டு, "என்கோச்செங்கண்ணனே" என்றுசொல்லிக்கொண்டு, உடனே இறந்துவிட்டாள். சுபதேவன் அப்புதல்வரை வளர்த்து முடிசூட்டி, அரசை அவரிடத்தில் ஒப்பித்து, தான் தவஞ்செய்து சிவலோகத்தை அடைந்தான்.

கோச்செங்கட்சோழநாயனார் பரமசிவனது திருவருளினாலே பூர்வசன்ம வுணர்ச்சியோடு பிறந்து, சைவத்திருநெறி தழைக்க அரசியற்றுவாராகி, சிவாலயங்கள் பலவற்றைக் கட்டுவிக்கத் தொடங்கினார். திருவானைக்காவிலே தாம் முன்னே அருள் பெற்றதை அறிந்து, அங்கே வெண்ணாவலுடன் பரமசிவனுக்குத் திருக்கோயில் கட்டுவித்தார். மந்திரிகளை ஏவி, சோழநாட்டில் வெவ்வேறிடங்களிலே சிவாலயங்கள் கட்டுவித்து, அவ்வாலயங்கடோறும் பூசை முதலியவற்றிற்கு நிபந்தங்கள் அமைத்தார். பின்பு சிதம்பரஸ்தலத்தை அடைந்து, சபாநாயகரைத்தரிசித்து வணங்கி, தில்லைவாழந்தணர்களுக்குத் திருமாளிகைகள் கட்டுவித்து, பின்னும் பலதிருத்தொண்டுகளைச் செய்துகொண்டிருந்து, சபாநாயகருடைய திருவடிநீழலை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## திருநேரிசை.

சிலந்தியு மானைக்காவிற் றிருநிழற் பந்தர்செய்து
உலந்தவ ணிறந்தபோதே கோச்செங்க ணானுமாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர்தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கைவீ ரட்டனாரே.